தினதந்தி 26/5/2022

தினத்தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்
இந்தியாவின் நம்பர் 1 தமிழ் நாளிதழ்

&

SRM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

இணைந்து வழங்கும்

# கல்வி கண்காட்சி 2022

## 28 & 29 மே

சுகுணா திருமண ஹால், அவினாஷி சாலை, பீளமேடு, கோவை - 641 004.

PLATINUM SPONSOR
50 PARK Group of Institutions YEARS OF TRANSFORMING INDIVIDUALS

**+2க்கு பிறகு என்ன படிக்கலாம்...**

கேட்டரிங் படித்தால் எங்கெல்லாம் வேலை பார்க்கலாம்...

அதிக வேலைவாய்ப்புள்ள பொறியியல் படிப்பு எது...

அனிமேஷன்

நீட் தேர்வை எதிர்கொள்ளும் வழிமுறை என்ன...

ஏரோநாட்டிக்கல் என்ஜினீயரிங் படிக்க எந்த நிறுவனம் சிறந்தது

மரைன் என்ஜினீயரிங்கில் மாணவர்கள் அதிகம் சேர என்ன காரணம்

செயற்கை நுண்ணறிவு கல்விக்கு அதிக மவுசு இருப்பது ஏன்...




கல்வித்துறை சார்ந்த பல்வேறு வல்லுநர்கள் நேரடியாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு தருவதுடன் வேலைவாய்ப்புள்ள மேற்படிப்பினை தேர்ந்தெடுக்க வழிக்காட்டுகிறார்கள்.

## கல்வி ஆலோசகர்கள்



C.ராஜா
Educationist



Dr.M.சரவண குமார்
DEAN
Anna University,



Dr.ரூபா குணசீலன்
Director I/C & Professor
Bharathiar University

பொறியியல், விவசாயம், கலை & அறிவியல், கேட்டரிங், அனிமேஷன் மற்றும் இதர பல்வேறு உயர் கல்வித்துறைகள் அடங்கிய 40க்கும் மேற்பட்ட கல்லூரிகள், நிகர்நிலை பல்கலைக்கழகங்களும் பங்கேற்கும் கல்வித்திருவிழா கண்காட்சி.

நாற்பதுக்கும் மேற்பட்ட அரங்குகள்

நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 6.30 மணி வரை

அனுமதி இலவசம்.

AMET UNIVERSITY | Bharath INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH Learners Today Leaders Tomorrow | HINDUSTAN INSTITUTE OF TECHNOLOGY & SCIENCE (DEEMED TO BE UNIVERSITY) CHENNAI | SRI KRISHNA INSTITUTIONS COIMBATORE | VELS | Event by: TURNKEY EVENTS Key to success

தினத்தந்தி 26/5/2022

தினத்தந்தி

# தினத்தந்தி - எஸ்.ஆர்.எம். இணைந்து வழங்கும் கல்வி கண்காட்சி

## கோவையில் 28-ந்தேதி தொடங்குகிறது

கோவை, மே.26-

தினத்தந்தி-எஸ்.ஆர்.எம். இணைந்து வழங்கும் கல்வி கண்காட்சி கோவையில் 28- ந்தேதி தொடங்குகிறது.

### தினத்தந்தி கல்வி கண்காட்சி

பிளஸ்-2 முடித்த மாணவர்கள் அடுத்து என்ன படிக்கலாம்? என்பதற்கு உதவும் விதமாக, தினத்தந்தி வழங்கும் "கல்வி கண்காட்சி-2022 " கோவையில் நடைபெறுகிறது.

எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனங்களுடன் இணைந்து மாணவ-மாணவிகளுக்கு உயர் கல்விக்கு வழிகாட்டும் விதமாக நடைபெற உள்ள இந்த கண்காட்சி பீளமேடு சுகுணா கல்யாண மண்டபத்தில் 28-ந்தேதி (நாளைமறுநாள்) மற்றும் 29-ந்தேதி ஆகிய 2 நாட்கள் நடைபெறுகிறது.

### கல்வி நிறுவனங்கள்

இந்த கல்வி கண்காட்சியின் பிளாட்டினம் ஸ்பான்சராக பார்க் கல்வி நிறுவனங்கள் மற்றும் அசோசியேட்ஸ்பான்சர்களாக வேல்ஸ் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப உயர் கல்வி நிறுவனம், அமெட் கடல் சார் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இந்துஸ்தான் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் கல்வி நிறுவனம், பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், ஸ்ரீ கிருஷ்ணா கல்வி நிறுவனங்கள் ஆகியவை தினத்தந்தி நாளிதழுடன் இணைந்து நடத்தி சிறப்பிக்க உள்ளன.

### மாணவ-மாணவிகளுக்கு பயன்

கல்வி கண்காட்சியில் மருத்துவம், பொறியியல், விவசாயம், கலை மற்றும் -அறிவியல், கேட்டரிங் மற்றும் இதர பல் வேறு உயர் கல்வி துறைகள் அடங்கிய 40 கல்லூரிகள், நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் பங்கேற்கும் கல்வி கண்காட்சியாக நடைபெறுகிறது. இந்த கண்காட்சியில் கல்வித்துறை சார்ந்த வல்லுனர்கள் நேரடியாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் தருகிறார்கள். மேலும், ஒவ்வொரு படிப்பிலும் இருக்கக் கூடிய பாடத்திட்டங்கள், அதற்குரிய தனியார் மற்றும் அரசு வேலை வாய்ப்புகள் பற்றிய அனைத்து விவரங்களையும் மாணவர்களுக்கு விளக்கும் வகையில் இந்த கல்வி கண்காட்சி நடைபெறுகிறது.

### நீட்தேர்வை சுலபமாக எதிர்கொள்வது எப்படி?

அதிகமான வேலைவாய்ப்புகள் கொண்ட பொறியியல் படிப்புகள், மரைன் மற்றும் ஏரோநாட்டிகல் பொறியியல் கல்வியில் உள்ள சர்வதேச வாய்ப்புகள், கேட்டரிங் படிப்புகள் மற்றும் 'நீட்' தேர்வை சுலபமாக எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் ஆகியவை பற்றி வல்லுனர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். மேலும், மாணவர் சேர்க்கை நடைமுறைகள், கட்டண விவரங்கள் மற்றும் கல்வி உதவித்தொகை விவரங்கள் போன்றவற்றையும் கண்காட்சி அரங்கத்தில் தெரிந்து கொள்ளலாம்.

### வாய்ப்புகள்

காலத்திற்கேற்ப ஒவ்வொரு துறையிலும் அறிமுகமாகி வரும் புதிய படிப்புகள், அதற்கான வேலை வாய்ப்புகள் பற்றி இந்த கண்காட்சியின் மூலம் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ளலாம். இந்தியாவில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் சென்று படிக்கக் கூடிய படிப்புகள் பற்றியும், அதற்கு தேவையான முன்னேற்பாடுகளையும் தெரிந்து கொள்ளலாம். மாணவர்களும், பெற்றோர்களும் இக் கண்காட்சியில் கலந்து கொண்டு உடனடி வேலை வாய்ப்புகள் கொண்ட படிப்புகள் பற்றி அறிந்து, அவற்றை அருகில் உள்ள கல்வி நிறுவனத்திலேயே பெறுவதற்கும் இந்த கண்காட்சி நல்ல வாய்ப்பாக அமைகிறது.

### அனுமதி இலவசம்

காலை 10 மணி முதல் மாலை 6.30 மணி வரையில் நடைபெறும் கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.